# அனுமதியின்றி செயல்பட்ட கோழி அறுக்கும் கடைகளை

# மூட உத்தரவு



கோலாலம்பூர், ஜூன் 26- லைசென்ஸ் இன்றி செயல்பட்ட கோழிகளை அறுக்கும் 4 கடைகளை உடனடியாக மூடும்படி உத்தரவிடப்பட்டது. ஜாலான் செமெரா பாடி, ஜாலான் குவாரி, புக்கிட் செராஸ் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஒத்துழைப்புடன் கூட்டரசுப் பிரதேச இஸ்லாமிய சமயத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. தூய்மை பற்றியும் ஹலால் சான்றிதழ் பற்றியும் புகார்கள் கிடைத்ததை அடுத்து அந்த இடங்களில் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டது.

மொத்தம் 7 கடைகள் சோதனை செய்யப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை கூறியது. இவற்றுள் 4 கடைகளை உடனடியாக மூட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பல்வேறு குற்றங்களுக்காக 8 நோட்டீசுகளும் சம்மன்களும் வெளியிடப்பட்டன. ஹலால் சான்றிதழ் இல்லாமல் கோழிகளை அறுத்தது, பதிவு செய்யப்படாமல் கோழிகளை அறுக்கும் பணியைச் செய்தது, தரைப்பகுதியும் சுவரும் அசுத்தமாக இருந்தது, ரத்தம் இருந்த அசுத்தமான நீரில் கோழிகளைப் போட்டு வைத்தது, சாக்கடைக்குள் கழிவுகளை வீசியது போன்ற குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் கடைகளில் அந்நியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இங்கிருந்து செராஸ், கோலாலம்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள உணவகங்களுக்கு அறுக்கப்பட்ட கோழிகள் விநியோகம் செய்யப் பட்டிருக்கின்றன.

அங்கு வேலை செய்த ஒருவரின் கோழிகளை அறுக்கும் சான்றிதழும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. நோய்த் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ்களை அவற்றின் உரிமையாளர்கள் மாட்டவில்லை. உணவுகளைக் கையாள்வது தொடர்பான பயிற்சி சான்றிதழையும் அவர்கள் காட்டவில்லை. எண்ணெய்யை முறையாக வெளியேற்றும் நடைமுறைகளையும் அவர்கள் கடைப்பிடிக்கவில்லை என்பது தெரிய வந்தது.

அனுமதி இன்றி செயல்படும் கடைகளுக்கு எதிராக அமலாக்க நடவடிக்கை தொடரும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.